6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1974).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே,

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து எண் 19/1974) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன் கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்களின் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள் :

1. திரு. ச. சங்குமுத்து தேவர்.
2. திரு. முனு ஆதி.
3. திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி
4. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.
5. திரு. நா. வெ. குருசாமி.
6. திரு. ஏ. சுப்பிரமணியம்.
7. திரு. கே. டி. கே. தங்கமணி.
8. திரு. ஆ. கு. சுப்பையா.
9. திரு. இ. எஸ். தியாகராசன்.
10. திரு. எ. க. துரைசாமி.
11. திரு. க. மு. இராசகோபால்.
12. திரு. என். கணபதி.
13. திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்.
14. திரு. கி. ஜெயராமன்.
15. திரு. சு. துரைசாமி.
16. திரு. எஸ். முருகையன்.
17. திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்.
18. திரு. கே. எம். சுப்பிரமணியம்.

* 9—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

19. திரு. மா. சுப்பிரமணியன் (ஈரோடு).

20. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு* 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் மூன் மொழிகிறேன்.

சிறு வணிகர்களுக்கு சலுகை அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959). 3 (1) 7 —(1) பிரிவுகளின்கீழ் வரி செலுத்துவதினின்றும் விலக்களிப்பதற்கான ஆண்டு மொத்த வியாபாரத் தொகை வரம்பை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்தது. அதற்கு நிகராக, வணிகராகப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்களிப்பதற்கான மொத்த வியாபாரத் தொகையின் வரம்பை 15,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாக உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. 50,000 ரூபாய்க்குக் குறையாமலும் ஆனால் ஐம்பத்தை யாயிரம் ரூபாய்க்குக் குறைவாகவும் மொத்த வியாபாரத் தொகை உடைய வணிகர் ஒருவருக்கான வரி இணக்க வீதத்தையும் வரி விதிப்பு வீதத்தையும் ரூபாய் 876 விருந்து ரூபாய் 840 ஆகக் குறைக்கவும் அரசு முடிவு செய்தது. அப்போதுதான் வரி இணக்க வீதத்தின் ஏதாவது இரண்டு நிலைகளுக்கிடையே உள்ள வேறுபாடு ரூபாய் 240 ஆக இருக்கும்.

வரி செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்பட்ட ஆண்டு மொத்த வியாபாரத் தொகை வரம்பு ரூபாய் 50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதால், ரூபாய் 35,000 க்கு மேற்படாத மொத்த வியாபாரத் தொகை உள்ள சிலவகை வணிகர்களுக்கு வரி செலுத்துவதினின்றும் விலக்களித்து மேற்சொன்ன சட்டத்தின் 3 (1) பிரிவின் வரம்பு நிபந்தனையைச் சேர்ந்த ( ) உட்பகுதியில் உள்ள விதித் துறையைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

---

* 9—4—1974-ம் மத்திய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.